தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 149 10.01.2026 சனிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 149 | Saturday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(10-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -26
பிறை: தேய்பிறை
திதி
சப்தமி நண்பகல் 12.33 வரை
பிறகு அஷ்டமி
நட்சத்திரம்:
அஸ்தம் இரவு 07.37 வரை
பிறகு சித்திரை.
யோகம்
மரண யோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி
சூலம் - கிழக்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | மாற்றம் |
| ரிஷபம் | பக்தி |
| மிதுனம் | தெளிவு |
| கடகம் | மேன்மை |
| சிம்மம் | நிறைவு |
| கன்னி | பரிசு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | பாராட்டு |
| தனுசு | தனம் |
| மகரம் | அனுகூலம் |
| கும்பம் | சுபம் |
| மீனம் | சுகம் |

# உலகளவில் முன்னணியில் இருப்பதை நோக்கி ஏஐ நிறுவனங்கள் செயல்பட பிரதமர் வேண்டுகோள்

**புதுடெல்லி,ஜன.10:**

இந்திய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், உலகளவில் முன்னணியில் இருப்பதை நோக்கி செயல்பட வேண்டும் என பிரதமர் மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு: உலகளாவிய தாக்கம்' குறித்த உச்சி மாநாடு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு இந்திய ஏஐ ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் அவதார், பார்த்ஜென், ஃப்ராக்டல், கான், ஜென்லூப், இன்டெலிஹெல்த், சர்வம், டெக் மஹிந்திரா, ஜென் டீக் உட்பட பல ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் சிஇஓ.க்கள் பங்கேற்றனர்.

மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் ஜிதின் பிரசாதா ஆகியோரும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது: ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், செயற்கை நுண்ணறிவு தொழில்முனைவோர் ஆகியோர் நாட்டின் எதிர்காலத்தை இணைந்து உருவாக்குபவர்கள். சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு முக்கியமானதாக உள்ளது. ஏஐ உச்சி மாநாட்டை இந்தியா அடுத்த மாதம் நடத்துவதன் மூலம், தொழில்நுட்ப துறையில் இந்தியா முக்கிய பங்காற்றுகிறது.




செயற்கை நுண்ணறிவை மேம்படுத்தி மாற்றத்தை கொண்டுவர இந்தியா முயற்சிகள் எடுக்கிறது. புதுமைகளை கண்டுபிடித்து அவற்றை மிகப் பெரியளவில் அமல்படுத்தும் திறன் நம் நாட்டில் அதிகமாக உள்ளது. உலகுக்கு தனிச்சிறப்பான ஏஐ மாடலை இந்தியா அளிக்க வேண்டும்.

உலகுக்காக இந்தியாவில் தயாரிப்பதை அது பிரதிபலிக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# "ஜன நாயகன்" திரைப்படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்க ஐகோர்ட்டு உத்தரவு

## சென்சார் போர்டு மேல்முறையீடு

**சென்னை,ஜன.10:**

நடிகர் விஜய் நடித்துள்ள ஜனநாயகன் என்ற திரைப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த படத்தில் இடம்பெற்றுள்ளசர்ச்சைக்குரிய காட்சிகளினால் சென்சார் சான்றிதழ் (தணிக்கை சான்று) வழங்கவில்லை. இந்த படத்தை மறுஆய்வு குழு பார்க்க உள்ளதாக தணிக்கை வாரியம் கடந்த 5-ந்தேதி உத்தரவிட்டது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், படத்தை தயாரித்துள்ள கே.வி.என். நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு நீதிபதி பி.டி. ஆஷா முன்பு கடந்த 7 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது.

தன் கருத்தை பரிசீலிக்கவில்லை. சர்ச்சைக்குரிய காட்சி இடம்பெற்றுள்ளது என்று இதுபோல எப்படி புகார் கொடுக்க முடியும்? இந்த புகார் ஏற்புடையதுதானா? அனைத்தையும்பார்க்கும்போது வினோதமாக இருக்கிறது" என்று கேள்வி எழுப்பினார். இந்த நடவடிக்கை அனைத்தும் சட்ட விதிகளை பின்பற்றியே நடந்துள்ளது என்றும் தணிக்கை வாரியம் தரப்பில் வாதிடப்பட்டது.

நீதிபதி பி.டி ஆஷா தனது உத்தரவில் கூறியிருப்பதாவது: "ஜனநாயகன் திரைப்பட விவகாரத்தில் அதிகார வரம்பை சென்சார் தலைவர் மீறியுள்ளார். தணிக்கை குழு பரிந்துரைத்த திருத்தங்களை ஜனநாயகன் படக்குழு மேற்கொள்ள வேண்டும். ஜனநாயகனுக்கு எதிரான புகார் ஆபத்தானது. இதுபோன்ற புகார்களை ஊக்கப்படுத்த முடியாது. ஆவணங்களை ஆய்வு செய்த போது புகார்தாரரின் குற்றச்சாட்டு பிற்போக்குத்தனமானது என்பது தெரிகிறது. தணிக்கை குழுவில் உறுப்பினராக உள்ளவர் அளித்த புகாரை ஏற்க முடியாது. எனவே ஜனநாயகன் திரைப்படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய உத்தரவை ரத்து செய்கிறேன். படத்திற்கு உடனடியாக யு/ஏ என குறிப்பிட்டு சென்சார் போர்டு வழங்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நீதிபதி தீர்ப்பளித்த அடுத்த சில நிமிடங்களிலேயே உத்தரவுக்கு எதிராக சென்சார் போர்டு மேல்முறையீடு செய்துள்ளது. இதனால் ஜனநாயகன் படத்திற்கு உடனடியாக யு/ஏ சான்றிதழ் கிடைக்காது என்று கூறப்படுகிறது. இது தொடர்பான விசாரணை நடைபெற உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## கடந்த ஆண்டு ரூ.2,000 கோடி போதைப்பொருட்கள் பறிமுதல்

**புதுடெல்லி,ஜன.10:**

2025-ம் ஆண்டில் நாடு முழுவதும் 1 லட்சத்து 33 ஆயிரம் கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம்(என்.சி.பி.) தெரிவித்துள்ளது.

அத்துடன் 447 வழக்குகளில் 25 வெளிநாட்டினர் உள்பட 994 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 131 வழக்குகளில் 256 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த குற்றவாளிகளுக்கு மொத்தம் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# உங்க கனவ சொல்லுங்க திட்டத்தை தொடக்கி வைத்த முதல்வர்!




**சென்னை,ஜன.10:**

உங்க கனவ சொல்லுங்க என்ற புதிய திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் பாடியநல்லூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன.9) தொடக்கி வைத்தார்.

கடந்த 2021-ஆம் ஆண்டில் திமுகஅரசுபொறுப்பேற்றதுமுதல் தற்போது வரை செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறுசமூகநலத்திட்டங்களின் பயனாளிகளுடைய தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தை அறியவும், மக்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு இந்தத் திட்டம் அறிமுகமாகிறது.

சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடும்பங்களைச் சந்தித்து, அவர்கள் பயன்பெற்றதிட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கணக்கெடுத்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்துவ அடையாள எண்ணுடன் கனவு அட்டை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (TNeGA) மூலம் தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

உங்க கனவ சொல்லுங்க திட்டம்

இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்த விவரங்கள் அனைத்து ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் முன்கூட்டியே முறையாக விளம்பரப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒருங்கிணைக்கும்.

இந்த அட்டை மூலம் WWW.UKS.TN.GOV.IN என்ற இணையதளத்தில் தங்களது கனவு /கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

# 'வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும்




## ஆளுநர் வேண்டுகோள்

**சென்னை,ஜன.10:**

பெரிய அளவில் கனவு கண்டு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு, 'வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு, மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்று எஸ்.ஆர்.எம். பல்கலை. விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் இந்தியக் குடியரசின் 75 ஆண்டுகள் வரலாற்றைப் போற்றும் வகையில், 'இந்திய குடியரசு - 75 ஆண்டுகள்' என்ற கருத்தரங்கு, வேந்தர் அருங்காட்சியகம் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு எஸ்ஆர்எம் பல்கலை. நிறுவனர் மற்றும் வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் தலைமை தாங்கினார். ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று 'வேந்தர் அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

இதில் இந்திய அரசியலமைப்பின் பரிணாமம், கோட்பாடுகள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் குறித்த அரிய காட்சிப் பொருட்களும், ஆவணங்களும் இடம்பெற்றுள்ளன. பின்னர் கருத்தரங்கில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது: இளைஞர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் விலைமதிப்பில்லா சொத்து.

லட்சியத்துடன் ஒழுக்கத்தையும் இணைத்து, பெரிய அளவில் கனவு கண்டு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு 'விக்சித் பாரத்' (வளர்ந்த இந்தியா) என்ற இலக்கை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்றார்.

வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் பேசும்போது, "ஜனநாயகத்தையும் தேசிய முன்னேற்றத்தையும் நிலைநிறுத்துவதில் வலுவான கல்வி நிறுவனங்களின் முக்கியப் பங்கு உள்ளது. கல்வி என்பது, ஒற்றுமை, தேசிய உணர்வு, பொறுப்புணர்வை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள். உயர்கல்வி நிறுவனங்கள், தேசத்தின் மீது அர்ப்பணிப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன" என்றார்.

# இடைநிலை ஆசிரியர்கள் தொடர் போராட்டம்: சென்னையில் 2,500-க்கும் மேற்பட்டோர் கைது

**சென்னை,ஜன.10:**

அரையாண்டு விடுமுறை முடிந்து கடந்த 5-ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையிலும், ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்வதால் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது என்று தொடக்கக் கல்வித் துறை அறிவித்தது.

இதையடுத்து, இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். 14-வது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் நேற்று காலை சுமார் 500 ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், மதியம் 12 மணியளவில், எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பேரணியாக வந்து சேர்ந்தனர். தொடர்ந்து திடீரென மேம்பாலத்தில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.



இதனால் போக்குவரத்து முழுவதும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களை போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் கைது நடவடிக்கைகள் மட்டும் 3 மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது.

மேலும், அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் சில ஆசிரியர்கள் மயக்கமடைந்தனர்.

சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் மண்டபங்களில் அடைக்கப்பட்டு, இரவில் விடுவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் போராட்டத்தால் பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் பணிகளும் பாதிக்கப்பட்டு வருவதால், தமிழக அரசு இந்த விவகாரத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதேபோல், பணி நிரந்தம் செய்யக் கோரி பகுதிநேர ஆசிரியர்கள் சென்னை டிபிஐ வளாகம் முன்பு போராட்டம் நடத்தினர். அவர்களையும் போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்களின் கைது செய்யப்பட்ட வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. இதற்கு பாமக தலைவர் அன்புமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# பெரும்பூண்டி ஊராட்சியில் பொங்கல் பரிசு தொகுப்பு



தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி யை அடுத்த பெரும்பூண்டி ஊராட்சியில் ரொக்கம் ரூ 3000 மற்றும் கரும்பு, அரிசி,சக்கரை உள்ளிட்டிவைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டன.

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

# உலக நன்மைக்காக குருபூஜை விழா



நேற்று நடைபெற்ற குருபூஜை விழா உலக நன்மைக்காகவும் உலக அமைதிக்காகவும் சித்தர்கள் முறையில் 18 சித்தர்களுக்கும் பூஜை செய்யப்பட்டு அகத்தியற்கு குரு ஆராதனை நடைபெற்று அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. மாலை 5 மணி வரை அன்னதானம் நடைபெற்றது.

எளிய முறையில் இந்த நாள் நடைபெற்றாலும் மிக சிறப்பு வாய்ந்ததாக நிகழ்வு அனைவருக்கும் அகத்தியர் அருள் மழை கிடைத்தது போல் ஆனந்தத்தில் குருபூஜை விழா நடைபெற்றது.

# சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் துவங்கி வைத்தார்



ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இருந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவங்கி வைத்தார். உடன் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் துறைஅதிகாரிகள் உள்ளனர்.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மகளிர் துணைக் குழு கூட்டம்



**மதுரை, ஜன.10:** மதுரை மாவட்டம் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மகளிர் துணைக் குழு கூட்டம் துணைக்குழு அமைப்பாளர் பானு தலைமையில் நேற்று 9.1.26 காலையில் நடைபெற்றது. மாநிலதலைவர் என் ஜெயச்சந்திரன் மகளிர் தினம் குறித்து சிறப்புரையாற்றினார். மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் மகளிர் துணைக் குழு வட்ட அளவில் அமைப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.மாவட்ட தலைவர், பொருளாளர், மாவட்ட இணைச் செயலாளர் வட்டக் கிளை நிர்வாகிகள் உள்ளிட்ட 23 மகளிர் உட்பட 27 பேர் கலந்து கொண்டனர். மாவட்டத்தில் மாவட்ட அமைப்பாளருடன் 10 மகளிர் துணை அமைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மகளிர் தினத்தை மார்ச் 8ல் மதுரையில் சிறப்பாக நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

# இளம் விஞ்ஞானி போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம்




**கிருஷ்ணகிரி, ஜன.10:** கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டணம் ஒன்றியம், தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவிகள் மாவட்ட அளவில் நடைபெற்ற இளம் விஞ்ஞானி போட்டியில் முதலிடம் பிடித்துள்ளனர்.

போச்சம்பள்ளி சிப்காட் CSD, FA1, FA2, LMES நிறுவனம் சார்பில் போச்சம்பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளம் விஞ்ஞானிகள் போட்டி நடைபெற்றது.

போட்டியில் தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவிகள் சஷ்மிதா, கார்த்திகா ஆகியோரின் படைப்புகள் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்துள்ளது. முதலிடம் பிடித்த மாணவிகள் சஷ்மிதா, கீர்த்திகா ஆகியோருக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் வெற்றி கோப்பையையும், பாராட்டு சான்றிதழையும் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

வெற்றி பெற்ற மாணவி களையும் வழிகாட்டி ஆசிரியை கவிதாவையும், பள்ளி தலைமை ஆசிரியர் முத்து லட்சுமணன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

# வருகிற 13-ந்தேதி கூடலூர் வருகிறார் ராகுல் காந்தி



**ஊட்டி, ஜன.10:** காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், பாராளுமன்ற எதிர்கட்சி தலைவருமான ராகுல் காந்தி வருகிற 13-ந் தேதி நீலகிரி மாவட்டம் கூடலூருக்கு வருகிறார்.

கூடலூர் பகுதியில் உள்ள தனியார் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியின் பொன்விழா நிகழ்ச்சி நடக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் ராகுல் காந்தி எம்.பி. பங்கேற்க உள்ளார். இதற்காக அவர் அன்றைய தினம் டெல்லியில் இருந்து ஹெலிகாப்டர் மூலமாக கூடலூர்-மைசூர் சாலையில் மார்தோமா நகர் பகுதியில் உள்ள மைதானத்திற்கு வருகிறார்.

அங்கிருந்து கார் மூலமாக விழா நடைபெறும் பள்ளிக்கு சென்று பொன் விழா நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அந்த நிகழ்ச்சி முடிந்ததும் அவர் அங்கிருந்து கேரள மாநிலம் திருச்சூர் புறப்பட்டு செல்கிறார்.

கூடலூருக்கு வருகை தரும் பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்திக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் மார்தோமா நகர் மைதானம் முதல் விழா நடைபெற உள்ள பள்ளி வரையிலும் 2 கி.மீ தூரத்திற்கு நிர்வாகிகள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை கட்சியின் அகில இந்திய உறுப்பினரும், தமிழ்நாடு மாநில பொதுச்செயலாளருமான கோசி பேபி தலைமையில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள். ராகுல் காந்தி வருகையையொட்டி கூடலூரில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட உள்ளது.

# இந்த ஆண்டாவது தீர்ப்பு கிடைக்குமா? - எதிர்பார்ப்பில் ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினர்



**மதுரை, ஜன.10:** தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை கடந்த 2020-ம் ஆண்டில் போலீசார் விசாரணைக்கு அழைத்துச்சென்று தாக்கியதில் படுகாயம் அடைந்து அடுத்தடுத்து இறந்தனர். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இதில் அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 9 போலீசார் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சி.பி.ஐ. விசாரணை அதிகாரியிடம் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குறுக்கு விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கு நேற்று நீதிபதி முத்துக்குமரன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, குற்றம் சாட்டப்பட்ட 9 போலீசாரும் ஆஜராகி இருந்தனர். அவர்களிடம் நீதிபதி பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

ஆனால் அதற்கு அவர்கள், தாங்கள் எந்த குற்றச்சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று மறுப்பு தெரிவித்தனர். இதையடுத்து இந்த வழக்கை இன்றைக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையை காண்பதற்காக இறந்த ஜெயராஜின் மகள்கள் மற்றும் குடும்பத்தினர் நேற்று கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.

வழக்கு விசாரணை முடிந்த பின்பு ஜெயராஜின் மகள் பெர்சிஸ், கலெக்டர் அலுவலக வளாகத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-எங்கள் தந்தை மற்றும் சகோதரர் இறந்த வழக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக மதுரையில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வருடமாவது இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

சி.பி.ஐ விசாரணை திருப்திகரமாக இருந்தது. இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் திடீரென அப்ரூவராக மாற விரும்புவதாக கூறியது உள்ளிட்ட சில காரணங்களால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக கருதுகிறோம். போலீசார் எங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஆனால் இந்த வழக்கில் கைதானவர்கள் சுதந்திரமாக அவர்களின் குடும்பத்தினரை சந்திக்கின்றனர். ஈவு இரக்கமின்றி என் தந்தையையும், தம்பியையும் காவல்துறையினர் தாக்கி இருக்கின்றனர். இதற்கு முழு காரணம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே ஜெயராஜ் பென்னிக்ஸ் இறப்பு சம்பந்தமாக ஆய்வு செய்த சுகாதாரத் துணை இயக்குனரின் அறிக்கையை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று சப்-இன்ஸ்பெக்டர் ரகு கணேஷ் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சி.பி.ஐ. தரப்பில் கால அவகாசம் கோரியதால், அந்த வழக்கை வருகிற 19-ந் தேதிக்கு நீதிபதி ஸ்ரீமதி ஒத்தி வைத்தார்.

# த.வெ.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவை அறிவித்தார் விஜய்



**சென்னை, ஜன.10:** தமிழ்நாட்டில் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலை நோக்கி அரசியல் கட்சிகள் தீவிரமாக பணியாற்றி வருகின்றன. கூட்டணி, தொகுதி பங்கீடு, தேர்தல் அறிக்கை தயாரிப்பு என பல்வேறு பணிகளில் மும்முரமாக கட்சி நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கதயாரிப்பு குழுவை அதன் தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அனைவருக்கும் வணக்கம்,

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும்மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு, நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது.


இதற்காகச் சிறப்புக் குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழு தமிழகம் முழுவதும் பொதுமக்கள், சிறு, குறு தொழில் அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், பொருளாதார & தொழில் வல்லுனர்கள், வர்த்தக சபைகள், பல்வேறு ஊழியர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் தேவைகளையும் அறிந்து, தரவுகளைப் பெறவுள்ளது.

அவர்களிடம் இருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டு மக்களையும் ஒட்டுமொத்த மாநிலத்தையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் தேர்தல் அறிக்கையினைத் தயார் செய்யவுள்ளது.

அருண் ராஜ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் அறிக்கை குழுவில், பிரபாகர், ராஜ்மோகன், மயூரி, சம்பத்குமார், அருள் பிரகாசம், விஜய் ஆர். பரணிபாலாஜி, முகமது பர்வேஸ், பிரபு, கிறிஸ்டி பிருத்வி, தேன்மொழி பிரசன்னா, சத்யகுமார் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்

இக்குழுவினருக்குக் கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, அந்தந்தப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகளைச் சந்திக்கும் பொழுது தேவையான உதவிகளைச் செய்யுமாறு விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 69 ஆண்டுகளாக வாயில் கல்லை வைத்து கொண்டே இருக்கும் முதியவர்



**முக்கூடல், ஜன.10:** நெல்லை மாவட்டம் முக்கூடல் பாலகன் தெருவை சேர்ந்தவர் கோவிந்தசாமி. 80 வயதான முதியவர் ஆரம்ப காலங்களில் எலக்ட்ரீசியன், சைக்கிள் கடை என பல்வேறு தொழில்கள் செய்து வந்த நிலையில் தற்போது வயது முதிர்வு காரணமாக வீட்டிற்கு தேவையான சிறுசிறு வேலைகளை செய்து வருகிறார்.

அது மட்டுமின்றி அவரது பள்ளி பருவத்தில் இருந்து சுமார் 69 ஆண்டுகளாக வாயில் கல்லை வைத்து கொண்டே இருந்து வருகிறார்.

இதுகுறித்து கோவிந்தசாமி கூறுகையில், நான் 1956-ம் ஆண்டு முக்கூடல் சொக்கலால் பள்ளியில் 6-ம் வகுப்பு படிக்கும் போது, எனது வகுப்பில் மாணவர் ஒருவர் சரியாக பேச முடியாமல் தவித்ததால் பள்ளி ஆசிரியர் அந்த மாணவன் வாயில் சிறிய கல்லை போட்டு பேசுமாறு தெரிவித்தார். இதே போல் நாமும் செய்தால் என்ன என்று எண்ணி, நான் உட்பட எனது நண்பர்கள் 10 பேர் வாயில் கல்லை போட்டு சுற்றி திரிந்தோம். அதில் ஒரு நண்பன் விளையாடும் போது பல் உடைந்து கல்லை வெளியேற்றிவிட்டான். தொடர்ந்து சிறிது நாட்களிலேயே மற்ற அனைவரும் கல்லை வெளியே எடுத்து விட்டனர்.

ஆனால் எனக்கு வெளியே எடுக்க விருப்பமில்லை. சாப்பிடும் போது, குளிக்கும் போது, வேலை பார்க்கும் போது, தூங்கும் போது என அனைத்து நேரங்களிலும் வாயில் கல்லை போட்டு சுற்றித்திரிந்தேன். இவ்வாறு சுமார் 69 ஆண்டுகளாக இதை போல் வாயில் கல்லை போட்டுள்ளேன்.

ஒருமுறை நான் தூங்கி கொண்டிருக்கும் போது வாயில் இருந்த கல்லை எனது மனைவி எடுத்து நெல் மூட்டையில் போட்டு விட்டார். அதனை தேடி எடுத்து மீண்டும் போட்டுக் கொண்டேன் என தெரிவித்தார்.

இது குறித்து அவரது அண்ணன் மகன் பிரசாத் கூறுகையில், எனது சித்தப்பா சிறுவயதில் இருந்தே வாயில் கல்லைபோட்டுள்ளார். இதனை நாங்கள் ஒரு சாதனையாகவே பார்க்கிறோம் என்றார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. போட்டியிடும் தொகுதிகள் உத்தேச பட்டியல் தயார்



**சென்னை, ஜன.10:** அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி நேரில் சந்தித்து கூட்டணியை உறுதி செய்தார்.

இந்த சந்திப்புக்கு பிறகு நிருபர்களுக்கு பேட்டி அளித்த எடப்பாடி பழனிசாமி கூட்டணியில் பா.ம.க. வுக்கு எத்தனை தொகுதிகள் என்பது உறுதி செய்யப்பட்டு விட்டதாகவும் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்து இருந்தார்.

பா.ம.க.வுக்கு 17 அல்லது 18 தொகுதிகளும் ஒரு மேல்சபை சீட்டும் வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

பா.ம.க. போட்டியிட விரும்பும் தொகுதிகள் பற்றிய உத்தேச பட்டியலும் தயாராகி விட்டதாக கூறப்படுகிறது.

திருப்போரூர், காஞ்சிபுரம், செஞ்சி, விக்கிரவாண்டி, ஜெயங்கொண்டம், மயிலாடு துறை, விருத்தாச்சலம், நெய்வேலி, கும்மிடிப்பூண்டி, சோளிங்கர், தர்மபுரி, பாப்பிரெட்டிபட்டி, பெண்ணாத்தூர், செய்யாறு, ஆற்காடு, திருத்தணி, வானூர், பூம்புகார்.

இதில் கூட்டணி கட்சிகள் ஒரே தொகுதியை கேட்டால் சில தொகுதிகள் மாறவும் வாய்ப்பு உண்டு என்கிறார்கள்.

# மத்திய அமைச்சரின் 31 வயது மகன் காலில் விழுந்த 73 வயது பா.ஜ.க எம்.எல்.ஏ - வீடியோ வைரல்



**போபால், ஜன.10:** பாஜக எம்.பி.யும் மத்திய தகவல்தொடர்புத் துறை அமைச்சருமான ஜோதிராதித்ய சிந்தியாவின் மகன் காலில் 73 வயது பாஜக எம்எல்ஏ, விழுந்து வணங்க முற்பட்ட வீடியோ வைரலாகி வருகிறது.

மத்திய பிரதேசத்தை சேர்ந்த பாஜக எம்எல்ஏ வான தேவேந்திர குமார் ஜெயின் (73) உடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தில், ஜோதிராதித்ய சிந்தியாவின் மகன் மஹாரியமான் சிந்தியாவும் கலந்து கொண்டார்.

இதன்போது, கேக் வெட்டி, தேவேந்திர குமாருக்கு மஹாரியமான் ஊட்டி விட்டார். இதைத்தொடர்ந்து 31 வயதேயான மஹாரியமானின் காலில் 73 வயதான தேவேந்திர குமார் விழுந்து வணங்க முயன்றார்.

தன்னைவிட 41 வயது இளையவரின் காலில் விழுந்து வணங்க முயன்ற தேவேந்திர குமாரின் இந்தச் செயல் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து பேசிய தேவேந்திர குமார் , "எனக்காக மஹாரியமான் பிறந்தநாள் வாழ்த்து பாடியதால் நான் உணர்ச்சிவசப்பட்டேன். இதனால்தான், அவரது கால்களைத் தொட முயன்றேன்.

இது முற்றிலும் கலாசார வெளிப்பாடு. இளம் வயதினரின் கால்களைத் தொடுவது குறித்து அரசியலமைப்பில் எதுவும் எழுதப்படவில்லை" என்று தெரிவித்தார்.

FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889

PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz

FLAT FOR SALE
PONMAR
STONE & ACRES
FLORA
2 BHK
INDEPENDENT
FLOOR - 1033 Sq.ft
99401 55588

NEWLY CONSTRUCTED A GRADE INDUSTRIAL WAREHOUSE
available on
Lease at TADA, Near Sri City, A.P
- Approx 1.15 lakh sq.ft.
- Ample parking place for lorries and cars
- Warehouse on main NH5 express high way having direct approach on high road
- Close vicinity to 3 ports and Sri City
- Construction as per "A" Grade warehouse norms
98402 97142

அருள்தரும் தெய்வம் என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3 CALENDAR
MANJALMART.COM
RS.100
9337501889
7789941009

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

உடனடி விற்பனை
திருவள்ளூர் அடுத்த மணவாளநகர்
தேசிய நெடுஞ்சாலை
மெயின் ரோட்டில்
26,0000 Sq.ft
(காம்பவுண்ட் உள்ளது)
6000 Sq.ft பில்டிங்
DTCP APPROVED
98400 24841

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

RG
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY

அருள்தரும் தெய்வம் என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

S.R
Call Drivers Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

## கவிதை அரங்கம்!





தூரம் என்பது முக்கியம்
அல்ல எடுத்து வைக்கின்ற
முதல் அடி தான் முக்கியம்


முடியாது என முடங்கி
விட்டால் வேதனை
முடியும் என எழுந்து
விட்டால் சாதனை

நீண்ட தூரம்
ஓடிவந்தால் தான்
அதிக தூரம்
தாண்ட முடியும்

உன் கையில்
பணமில்லையெனினும்
தன்னம்பிக்கையிருந்தால்
நீயும் செல்வந்தனே

தனிமை வேதனை என்று
நினைத்து விடாதே
சாதனை செய்யும்
அளவிற்கு சிந்தனைகளை
அது கற்று தரும்

## வாழ்க்கை தத்துவம்...



முடியாதுனு விட்டுட்டா
வெற்றியில்லை
விட முடியவே முடியாதுனு
விடாமல் இருந்தால்
தோல்வியில்லை

வசதியென்பது
பணத்தில் மட்டும் இல்லை
மனசுக்கு நிம்மதியான வாழ்க்கையும்
வசதியான வாழ்க்கை தான்

உணரும் வரை உண்மை
கூட பொய் தான்
புரியும் வரை வாழ்க்கை
கூட ஒரு புதிர் தான்

வெற்றிக்கு துணையாக
இருப்பவன் நண்பன்
வெற்றிக்கு காரணமாக
இருப்பவன் எதிரி

## சாவி (வந்து) வந்த வேளை(வேலை)



மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டாள் செல்ல மணி. காரணம் அவளின் பல நாள் கனவு இன்று நனவாகியது.தன்னுடைய விடாமுயற்சியாலும்,கடவுளின் அருளாலும் அவளின் கனவு நனவானது. அவளுக்கு மிகவும் பிடித்தப் புடவைகளை எப்படியோ வாங்கி சேர்த்து விட்டாள். இளமைப் பருவத்தில் உடுத்தும் ஆடைக்கு மிகவும் கஷ்டப்பட்டதால் துணிக் கடைக்குச் சென்றால் வள்ளலாகி விடுவாள். கண்ட புடவைகளை எல்லாம் வாங்கி வந்து விடுவாள்.வேலைக்குச் செல்லும்போது தினம் ஒரு புடவை கட்டிக்கொண்டு செல்ல அப்படி வாங்கினாள். சேர்த்தப் புடவைகளைப் பைகளில் வைத்திருந்தாள்.அவளின் வாழ்நாள் கனவான பீரோ வாங்க..சிறுகசிறுகச் சேர்த்தாள். தான் வாங்கப் போகும் பீரோ மூன்று தலைமுறை நிலைத்து, தரமானதாக இருக்க வேண்டும் என்று சிறந்த கம்பெனி பீரோக்களை கடைகடையாக... ஒரு மாதமாகத தேடிக் கண்டுபிடித்தாள். தான் அலங்காரம் செய்ததைத் தனக்கே காட்டும் கண்ணாடியையும் பொருத்திவிட்டாள். உலக சாதனையே செய்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தாள். ஒவ்வொரு புடவையையும் அழகாக மடித்து பீரோவில் அடுக்கி விட்டாள். தன் மகள் கல்லூரி சான்றிதழ்களையும் லாக்கரில் வைத்து திருவனந்தபுரம் பத்மநாத சுவாமி கோவில்..”தங்கமாக “நினைத்து பத்திரப்படுத்தினாள். தங்க பொக்கிஷம் போலப் பூட்டி வைத்தாள். மறந்து விடக்கூடாது என்பதற்காக சரியான ஒரு இடத்தைத் தெரிவு செய்தாள்...பின்பு அனைத்துத் துணிகளையும் அடுக்கி அழகாக வைத்தாள். தன் வீட்டு வேலைக்காரி அம்மாவிடம் நீங்கள் பயமில்லாமல்,நாங்கள் இல்லாத நேரத்திலும் கூட எங்கள் வீட்டைச். சுத்தம் செய்யலாம் என்று பெருமையடித்துக் கொண்டிருந்தாள் செல்லமணி.

பீரோ வந்த நல்ல நேரம், ஒரு பெரிய நிறுவனத்தில் தன் மகளுக்கு நேர்முகத்தேர்வும் வந்தது. முதல் நாளே அனைத்தையும் நகலெடுத்து ஆயத்தமானாள். மூலச் சான்றிதழ்களைத் தானே பீரோவில் வைத்துக் கொள்வதாகத் தாய் செல்லமணி பிடிவாதமாகக் கூறிவிட்டாள். பொழுது விடிந்தது. நேர்முகத் தேர்விற்குத் தயாரானாள் மகள்.செல்லமணிக்குப் பெருமை தாங்கமுடியவில்லை. பொழுது விடிந்தது. நேர்முகத் தேர்விற்குத் தயாரானாள் மகள். காலை உணவுகளைத் தயார் செய்தாள்.குடும்பத்தோடு குலசாமியை வணங்கினார்கள். ஆசையாக வாங்கிய பீரோவில் வைக்கப்பட்ட சான்றிதழ்களைப் பீரோவிலிருந்து எடுக்கச் ஒய்யாரமாகச் சென்றாள் செல்ல மணி... அவளைப் பின்தொடர்ந்தது குடும்பம். சாவியைத் துளையில் செருகினாள். திறந்துப் பார்த்தாள்.... ஆனால்,திறக்கவில்லை. குடும்பமே திறக்க முயற்சித்தது... ஆசை ஆசையாக வாங்கிய பீரோ.! ஒரு வாரம் கூட ஆகவில்லை... உடனே, தொலைபேசியில் கடையைத் தொடர்பு கொண்டார்கள். அவர்களோ பீரோ வாங்கிய கடையை அணுக அலைபேசி எண்ணை கொடுத்தார்கள். இப்படியாக அரை மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. கடைசியாக,யாரோ ஒருவர்,” புகார் அளித்த 48 மணி நேரம் கழித்து ஆவன செய்யப்படும் என்று கூறினார். “ஆண்டவா” என்று அலறியேவிட்டாள். இன்னும் 4 மணி நேரத்தில் நேர்முகத்தேர்வு.,48 மணி நேரம் எப்படி இருக்க முடியும் என்று எவ்வளவோ கெஞ்சியது குடும்பம்.கடிகாரம் தன் கடமையைச் சரியாகச் செய்தது.பீரோவில் உள்ள லாக்கர் சாவியை கொண்டு திறந்து பார்க்கலாம் என்று கணவர் சொன்னார்.... தான் வணங்கும் குலசாமியை.வேண்டி திறந்து பார்த்தாள்.. என்ன ஆச்சரியம்.... பீரோ திறந்தது.. காரணம் லாக்கர் சாவியும் பீரோ வெளியில் திறக்கும் சாவியும் கைத்தவறி மாற்றி வைத்ததன் விளைவுதான்... லாக்கர் சாவி எப்படி வெளிக் கதவைத் திறக்கும்... இப்பொழுது வெளிக்கதவு சாவியை எடுத்துக் கொண்டு வந்து பீரோவைத திறந்தவுடன் திறந்தது...குடும்பமே மகிழ்ந்தது. சான்றிதழ்களைச் சரிபார்த்துக் கொண்டு.. சரியான நேரத்தில் நேர்முகத்தேர்விற்குச் சென்று தேர்ச்சியும் பெற்று, நல்ல வேளை வந்த வேளை வேலையும் கிடைத்தது.

**ம.முத்துலெட்சுமி**
ஓசூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது;*
*நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு.*
*ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு.*
*ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ?*
*எல்லா படிக்கடையும் தான் ஏறணும் சார்!*



## தினம் ஒரு சமையல்



### உருளைக்கிழங்கு மிளகு வறுவல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1. உருளைக்கிழங்கு | - 200 கிராம் |
| 2. மிளகு | - ஒரு டீஸ்பூன் |
| 3. மிளகாய்த்தூள் | - ஒரு டீஸ்பூன் |
| 4. தனியாத்தூள் | - 2 அல்லது 3 டீஸ்பூன் |
| 5. மஞ்சள் தூள் | - கால் டீஸ்பூன் |
| 6. வெங்காயம் | - 1 |
| 7. சீரகம் | - அரை டீஸ்பூன் |
| 8. காய்ந்த மிளகாய் | - 3 |
| 9. கறிவேப்பிலை | - சிறிது |
| 10. எண்ணெய் | - இரண்டு டேபிள்ஸ்பூன் |
| 11. உப்பு | - தேவைக்கேற்ப |

செய்முறை:



முதலில் ஒரு டீஸ்பூன் மிளகை மிக்சியில் போட்டு கொரகொரப்பாக பொடித்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் உருளைக்கிழங்கை போட்டு தண்ணீர் ஊற்றி வேக வைத்து, தோலை உரித்து விட்டு, சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் சீரகம், கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் சேர்த்து தாளித்த பின்னர் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.வெங்காயம் நன்றாக வதங்கியதும் அதில் உருளைக் கிழங்கைப் போட்டு சற்று வதக்கவும்.அதன் பின் அதில் மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து நன்றாகப் பிரட்டி விடவும்.

அனைத்து சேர்த்து வரும் போது கடைசியில் மிளகுத்தூளைத் தூவி, மீண்டும் நன்றாகக் கிளறி விடவும்.அடுப்பை சிறு தீயில் வைத்து, உருளைக்கிழங்கை அடிக்கடி திருப்பி விட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை அல்லது கிழங்கு பொன்னிறமாகும் வரை வைத்திருந்து எடுக்கவும்.சுவையான உருளைக்கிழங்கு மிளகு வறுவல் ரெடி.

## பப்பாளி பயன்கள்



**செரிமானத்திற்கு பப்பாளியின் நன்மைகள்**
பப்பாளியில் பப்பேன் எனப்படும் நொதி நிறைந்துள்ளது, இது புரதங்களை உடைக்க உதவுகிறது மற்றும் செரிமானத்தை எளிதாக்குகிறது. இது அனுபவிப்பவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் வீக்கம், அஜீரணம் அல்லது எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி.

**நோய் எதிர்ப்பு சக்திக்கு பப்பாளியின் நன்மைகள்**
பப்பாளியில் வைட்டமின் சி நிறைந்துள்ளது, இது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, உங்கள் உடல் நோய்களை எதிர்த்துப் போராட உதவுகிறது.

**இதய ஆரோக்கியத்திற்கு பப்பாளி**
பப்பாளியில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள், நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் ஆகியவை சிறந்த இரத்த ஓட்டத்திற்கும், கொழுப்பின் அளவைக் குறைப்பதற்கும், புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பதற்கும் பங்களிக்கின்றன. இருதய நோய்.

**நீரிழிவு நோய்க்கு பப்பாளியின் நன்மைகள்**
பப்பாளி பழம் இரத்த சர்க்கரை அளவை சீராக வைத்திருக்க உதவுகிறது, ஏனெனில் இது குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளது மற்றும் நிறைய நார்ச்சத்துக்களைக் கொண்டுள்ளது. அதாவது நீரிழிவு நோயாளிகளுக்கு இது ஒரு நல்ல தேர்வாக இருக்கும்.

**மலச்சிக்கலுக்கு பப்பாளி**
பப்பாளியில் உள்ள நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்து ஆரோக்கியமான குடல் இயக்கத்தை மேம்படுத்தி, இயற்கையாகவே மலச்சிக்கலைத் தடுக்கிறது.

**பப்பாளி மற்றும் கொழுப்பு**
பப்பாளியை தொடர்ந்து சாப்பிடுவது, அதன் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பு மற்றும் நார்ச்சத்து காரணமாக கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்க உதவும்.

## போட்றா வெடிய விஜய்யின் ஜனநாயகன் படத்திற்கு கிடைத்த GREEN SIGNAL... ரசிகர்களே தயாரா?




நடிகர் விஜய்யின் கடைசிப்படமான ஜனநாயகன் ரசிகர்களின் பெரிய எதிர்ப்பார்ப்பில் இருக்கும் திரைப்படம்.

எச்.வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெட்ச், மமிதா பைஜு, பாபி தியோல் என பலர் நடிக்க தயாராகியுள்ள இப்படம் அரசியல் கதைக்களத்தை மையப்படுத்திய ஒரு கதை. அனிருத் இசையில் தயாராகியுள்ள இப்படத்தின் பாடல்கள் அனைத்தும் வெளியாகிவிட்டது.

இன்று படம் வெளியாகி இருக்க வேண்டும் ஆனால் தணிக்கை குழு சான்றிதழ் கிடைக்காததால் அதில் பிரச்சனை ஏற்பட ரிலீஸ் தள்ளிப்போனதாக தயாரிப்பு குழு அறிவித்திருந்தனர். அதில் இருந்தே பிரபலங்கள் பலரும் விஜய்க்கு ஆதரவாக பதிவுகள் போட்டு வந்தனர்.

எல்லாம் தயாராகிவிட்டது, ஜனநாயகன் தணிக்கை சான்றிதழ் பெற மட்டுமே பிரச்சனையாக இருந்தது.

ஆனால் அந்த பிரச்சனையும் இப்போது முடிந்துவிட்டதாக தெரிகிறது. இன்று 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஜனநாயகன் விசாரணைக்கு வர, விஜய்யின் ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்று வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல் மறு ஆய்வுக்கு அனுப்பிய உத்தரவும் ரத்து செய்யப்பட்டுள்ளது.






நடிகை அமைரா தஸ்தூர் மிகவும் கவர்ச்சியான உடையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகின்றன.

## உலகத்திலேயே இப்போது சந்தோஷமான நபர் எனது கணவர் தான்... தொகுப்பாளினி மணிமேகலை பதிவு



தமிழ் சினிமாவை விட சின்னத்திரைக்கு தான் இப்போது மக்களின் பெரிய ஆதரவு இருக்கிறது.

வாரா வாரம் புதிய படங்களின் ரிலீஸை தாண்டி எந்த தொலைக்காட்சியில் என்ன சீரியல் வருகிறது என்பதை காண தான் ரசிகர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.
புதிய வருடத்தில் சன், விஜய், ஜீ தமிழ் 3 தொலைக்காட்சிகளுமே புத்தம்புதிய சீரியல்களை களமிறக்கி வருகிறார்கள்.

சீரியல்களை தாண்டி ரியாலிட்டி ஷோக்களும் செம ஹிட்டடிக்கிறது. அப்படி ரியாலிட்டி ஷோக்களை தொகுத்து வழங்குவதன் மூலம் பிரபலமான தொகுப்பாளர்களும் உள்ளனர்.

எந்த நிகழ்ச்சி கொடுத்தாலும் ஜாலியாக கொண்டு செல்லும் ஒரு தொகுப்பாளினி தான் மணிமேகலை. இவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தாண்டி நிறைய தனியார் நிகழ்ச்சிகளையும், வெளிநாட்டிற்கு சென்றும் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகிறார்.

தற்போது இவர் தனது இன்ஸ்டாவில், இந்த உலகத்தில் தற்போது மிகவும் சந்தோஷமான நபர் என்றால் அது எனது கணவர் தான். நான் 10 நாட்களுக்கு வெளிநாடு செல்கிறேன், என் பொண்டாட்டி ஊருக்கு போய்ட்டா என்ற சந்தோஷத்தில் இருக்கப்போகிறான் என பதிவு செய்துள்ளார்.

# 11 தலைமுறைக்கான பலனை அள்ளித்தரும் அட்சயதிருதியை

அட்சய திருதியை என அறியப்படுவது இந்து மற்றும் சமணர்களின் புனித நாள் ஆகும். அது தமிழ் மாதமான சித்திரையில் வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்த மூன்றாம் நாளில் கொண்டாடப்படுவதாகும். முதல் யுகமான கிருதயுகத்தில் பிரம்மனால் உலகம் தோற்றுவித்த நாள் அட்சய திருதியை ஆகும். காக்கும் கடவுளான திருமாலால் ஆளப்படுவதாகும். மேலும் இந்து புராணங்களில் குறிப்பிடப்படும் முனிவரான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கொண்டாடப்படுகிறது, அவர் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறார். இந்து இதிகாசங்களின்படி, அட்சய திருதியை நாளில் திரேதா யுகம் தொடங்கியது, மேலும் பகீரதன் தவம் செய்து இந்தியாவின் மிகப் புனிதமான புண்ணிய நதியான கங்கை நதி சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வரவழைத்தது இந்நாளில்தான் எனக் கூறப்படுகிறது.

"அட்சயா" எனும் சொல் சமசுகிருதத்தில் எப்போதும் குறையாதது எனும் பொருளில் வழங்கப்படுகிறது. மேலும் இந்த நாள் நல்ல பலன்களையும் வெற்றியையும் தரும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக மங்களகரமான நீண்டகால சொத்துக்களான தங்கம், வெள்ளி, அவற்றினால் செய்யப்பட்ட நகைகள், வைரம் மற்றும் இதர விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் வீடு-மனைகள் போன்றவற்றை வாங்க உகந்த நாளாகவும் கருதப்படுகிறது. மரபியல் வழிவந்தவர் அட்சய திருதியை நாளில் தொடங்கப்பட்ட எந்தவொரு முயற்சியும் தொடர்ச்சியாக வளர்ந்து நன்மையைக் கொடுக்கும் எனக் கூறுகின்றனர். ஆகையால் ஒரு வணிகத்தினைத் துவங்குவது, கட்டடம் கட்ட பூமி பூசையிடுவது போன்ற புதிய முயற்சிகளை அட்சய திருதியை நாளில் செய்ய பலர் விரும்புகின்றனர். இந்த நாளில் செல்வத்திற்கு அதிபதியான குபேரனையும், லட்சுமியையும் வழிபாடு செய்வது சிறப்புக்குரியது. அன்றைய தினம் குபேர லட்சுமி பூஜையும் நடத்தப்படுகிறது. லட்சுமி உருவப்படத்துடன் குபேரரின் அடையாளமான, சுதர்சன குபேர எந்திரமும் வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது.



விரதம் இருக்கும் முறை

அட்சய திருதியை நாள் அன்று, அதிகாலை எழுந்து நீராட வேண்டும். பின்னர் இல்லத்து பூஜை அறையில் அரிசி மாவால் கோலம் போட வேண்டும். அந்த கோலத்தின் மீது பலகை வைத்து, அதன் மீதும் கோலம் போட வேண்டும். ஒரு சொம்பில் அரிசி, மஞ்சள், நாணயம், சிறிய நகைகளை போட வேண்டும். பின்னர் அந்த சொம்பில் நீர் நிரப்பி, அதற்கு சந்தனம், குங்குமம் இட வேண்டும். பின்னர் சொம்பின் மேல் தேங்காய் வைத்து, அதைச் சுற்றிலும் மாவிலையை வைத்து கலசமாக தயார் செய்து பலகையில் வைக்க வேண்டும். மேலும் லட்சுமி நாராயணர், அன்னபூரணி, குபேரன், சிவ-சக்தி ஆகியோரது படங்களில் ஒன்றை வைத்து, அதற்கு சந்தனம், குங்குமம் இட்டு மாலையிட வேண்டும்.

அந்தப் படங்களின் முன்பு குத்துவிளக்கு அல்லது காமாட்சி விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். பிறகு கும்பத்தின் முன்பு நுனி வாழை இலையில் அரிசியை பரப்பி, அதன் மீது விளக்கு ஏற்றிவைக்க வேண்டும். அதன் அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து, அதற்கு குங்குமம் இட்டு பூ போட வேண்டும். மேலும் பொன் மற்றும் புதியதாக வாங்கிய பொருட்களை கலசத்திற்கு அருகில் வைத்து தீபாராதனை காட்டி வழிபட வேண்டும். இவ்வாறு செய்வதால் அளவற்ற பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். அட்சய திருதியை நாளில் குலதெய்வ வழிபாடு செய்வதும் முக்கியமானது. தயிர் சாதம் தானம் செய்தால் ஆயுள் கூடும். இனிப்பு பொருள் தானம் செய்தால் திருமணத் தடை நீங்கும். உணவு தானியம் அளித்தால் அகால மரணத்தைத் தடுக்கலாம். கால்நடைகளை தானமாக வழங்கினால், வாழ்வு வளம் பெறும். மூதாதையர்களுக்கு தர்ப்பணம் செய்தால், பாவ விமோசனம் கிடைக்கும். ஏழைகளுக்கு தயிர் சாதம் தருவது, 11 தலைமுறைக்கான பலன்களைப் பெற்றுத் தரும்.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள் — பெ.வரதராஜுலு நாயுடு வரலாறு

பெ. வரதராஜுலு நாயுடு, ஜூன் 4, 1887 - ஜூலை 23, 1957) இந்திய அரசியல்வாதியும், இந்திய விடுதலை போராட்ட வீரரும் ஆவார். இவர் தென்னாட்டு திலகர் என்று புகழப்படுகிறார். சித்த ஆயுர்வேத மருத்துவரும், பத்திரிக்கையாளருமான இவர் சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

## வாழ்க்கைக் குறிப்பு

தமிழ்நாடு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 1887 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் தேதி வரதராஜுலு பிறந்தார்.[2] பலிஜா நாயுடு சமூகத்தை சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் பெருமாள் நாயுடு, தாயார் பெயர் குப்பம்மாள். 24ஆம் வயதில் அவர் ருக்மணி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

உயர்நிலைக் கல்வி கற்கும் பொழுதே நாடெங்கும் பரவிய வந்தேமாதரம் இயக்கம் இவரைக் கவர்ந்தது. "முற்போக்காளர் சங்கம்" எனும் ஓர் அமைப்பை மாணவர்களிடையே அமைத்தார். அன்னியத் துணி விலக்கு, சுதேசியம் எனும் தேசிய இலட்சியங்களை முழங்கியதால் பள்ளியில் இருந்து விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பத்தொன்பது வயதிலேயே தேசிய அரசியலில் ஈடுபட்டார். அவர் சித்தவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் இரண்டிலும் தேர்ச்சி பெற்று மருத்துவத் தொழிலில் பெரும் புகழ்பெற்றதால் அமைந்தது.


## அரசியலில்

1906 ஆம் ஆண்டில் 19 வயதில் இந்திய தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார். 1916 இல் தேசியஅரசியலில் தீவிரமாகப் பங்கேற்றார். 1918 இல் மதுரை ஹார்வி மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஊக்குவித்து ஆற்றிய பேச்சுக்காக முதல் சிறைவாசம் விதிக்கப்பட்டது. சொற்பொழிவில் அரசு நிந்தனைக்குரிய குற்றம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு, பதினெட்டு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. விசாரணையில், நாயுடுவின் சார்பில் சி. இராஜகோபாலாச்சாரி வாதாடினார். உயர்நீதிமன்ற மேல் முறையீட்டில் இராஜாஜி எழுப்பிய சட்ட நுணுக்கவாதத்தால், நாயுடு விடுதலை பெற்றார்.

அவர் சேலத்தில் வாரப்பதிப்பாக 1919ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பித்த "தமிழ்நாடு" இதழும் அவர் எழுதிய இரு கட்டுரைகள், அரசுத்துரோகமானவை என்று குற்றம் சாட்டப்பட்டு விதிக்கப்பட்ட ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையால் இரண்டாம் சிறைவாசத்தை ஏற்றார்.

1923இல் பெரியகுளம் தாலுக்கா மாநாட்டில் தடை உத்தரவை மீறிப் பேசியதற்காக ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இது மூன்றாவது சிறைத் தண்டனையாகும். 1920 ஆகஸ்டில் காந்தியடிகள் திருப்பூர் வந்தபொழுது, வரதராஜுலு நாயுடு வீட்டில் தங்கினார். 1921 இல் மீண்டும் சேலம் வந்த பொழுது இவரது வீட்டில் தங்கினார். காந்தியடிகள் அப்பொழுது நடைபெற்ற மகளிர் கூட்டமொன்றில் நாயுடுவின் மனைவி ருக்மணி, தாம் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும், காந்தியடிகளிடம் கொடுத்துவிட்டார்.

1922 இல் காந்தியடிகள் சிறைப்படுத்தப்பட்டபொழுது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க, அரசாங்கத்துக் குரிய



வருமான வரியைக் கட்ட மறுத்தார். காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகு தான் வரிகட்ட முடியும் என அறிவித்துப் புதுமையை நிகழ்த்தினார்.

வரி மறுப்பைக் குறிப்பிட்டு டாக்டர் நாயுடு அரசாங்கத்திற்கு எழுதிய கடிதம், காந்தியடிகளின் "யங் இந் தியா"வில் வெளிவந்தது.

1925 இல் தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியில் தலைவராகவும் பணியாற்றினார். 1929 இல் காங்கிரசோடு கருத்து வேற்றுமை கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறினார். பின்னர் ஆரியசமாஜத்தில் இணைந்தார். ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது,அதனை முறியடிப்பதற்கென்று வரதராஜுலு பிரசாரம் செய்தார். ஜி. சுப்பிரமணிய ஐயர், பாரதியார், திரு வி. க.வைத் தொடர்ந்து, தேசியத் தமிழ் இதழியல் துறையை மேலும் வளர்த்தவர் நாயுடு.

## இதழியல் பணி

இவரது இதழியல் பணி "பிரபஞ்சமித்திரன்" எனும் வார இதழ் மூலம் தொடங்கியது. [3] மங்கலம் ஷண்முக முதலியார் உரிமையாளராகவும், சுப்பிரமணிய சிவா ஆசிரியராகவும் நடத்தப்பட்ட "பிரபஞ்சமித்திரன்" மிகுந்த பொருள் இழப்பில் தத்தளித்தபொழுது, நாயுடு 1916 இல் அந்த இதழை வாங்கினார். அவர் ஆசிரியரானார். இரண்டாண்டுகள் வெளிவந்தது. 1918 ஆம் ஆண்டு நாயுடு சிறைப்பட்டபொழுது, ஆயிரம் ரூபாய் ஈடுகாணம் அரசால் கேட்கப்பட்டு, பத்திரிகை முடக்கப்பட்டது.

பிரபஞ்சமித்திரனுக்குப் பிறகு "தமிழ்நாடு" இதழைத் தொடங்கி ஆசிரியராக இருந்து பணிஆற்றிய நாயுடுவின் பணி ஒரு வரலாற்றுச் சாதனையாகும். 1925 ல் தமிழ்நாடு வார செய்தி பத்திரிக்கையை துவக்கினார். 1931 இல் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கிலப் பத்திரிகையின் சென்னைப் பதிப்பை துவக்கினார். பிற்காலத்தில் நிதிநெருக்கடியால் விற்பனை செய்யப்பட்டது.

1930-32களில் காந்தியடிகள் நடத்திய உப்பு சத்தியாகிரகத்தையும், சட்டமறுப்பு இயக்கம் முதலியவற்றையும் நாயுடு எதிர்த்தது இவருடைய அரசியல் வீழ்ச்சிக்கும், தமிழ்நாடு இதழின் நலிவிற்கும் காரணமாயிற்று. விடுதலை பெற்ற இந்தியாவில் நாயுடு 1951இல் சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக சேலத்தில் இருந்து காங்கிரஸ் சார்பில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், சேலம் நகரத்தில் போட்டியிட்டு கம்யூனிஸ்ட் வேட்பாளரான மோகன் குமாரமங்கலத்தைத் தோற்கடித்து சட்ட மன்ற உறுப்பினரானார்.

"தென்னாட்டுத் திலகராக"ப் புகழ் பூத்த வ.உ.சி, 1934இல் "தேசிய சங்கநாதம்" எனும் தலைப்பில் 32 பக்கங்களில் பி.வரதராஜுலு நாயுடுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

## எம்பிபிஎஸ் சேர்க்கை விவரங்களை பதிவேற்ற அறிவுறுத்தல்

**புதுடெல்லி, ஜன.10:**

நிகழ் கல்வியாண்டில் எம்பிபிஎஸ் படிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் குறித்த விவரங்களை இணைய வழியே வரும் 15-ஆம் தேதிக்குள் பதிவேற்றுமாறு தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக என்எம்சி சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பு: எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, நிகழாண்டில் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள், மதிப்பெண் விவரம், இடஒதுக்கீடு விவரம், கட்டண விவரம் உள்ளிட்டவற்றை என்எம்சி இணையப் பக்கத்தில் பதிவேற்ற வேண்டியது அவசியம். இதுவரை மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வு மற்றும் காலியாக உள்ள மருத்துவ இடங்களுக்கான சிறப்பு கலந்தாய்வுமூலம் சேர்க்கப்பட்ட மாணவர் விவரங்களை என்எம்சி தளத்தில் பதிவேற்ற வரும் 15-ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, 2026-2027-ஆம் ஆண்டுக்கு புதிதாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கும், இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை அதிகரிப்பதற்கும் விண்ணப்பிக்கலாம் என தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அறிவித்துள்ளது.

## இந்தியாவில் விசா சேவைகளை தற்காலிகமாக நிறுத்தியது வங்கதேசம்

**புதுடெல்லி, ஜன.10:**

'பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, தில்லி உள்பட இந்தியாவில் உள்ள தனது முக்கிய தூதரகங்களில் நுழைவு இசைவு (விசா) சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக வங்கதேச இடைக்கால அரசு வியாழக்கிழமை அறிவித்தது.

இது தொடர்பாக வங்கதேச வெளியுறவுத் துறை ஆலோசகர் எம்.தௌஹித் ஹுசைன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவில் தில்லி, கொல்கத்தா, அகர்தலா ஆகிய நகரங்களில் உள்ள வங்கதேசத்தின் மூன்று முக்கிய தூதரகங்களில் விசா சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் பாதுகாப்பு தொடர்பான முடிவு.

கொல்கத்தாவில் உள்ள வங்கதேச துணைத் தூதரகம் ஏற்கெனவே விசா சேவைகளைக் கட்டுப்படுத்தியுள்ளது. எனினும், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான விசாக்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தாது. மும்பை மற்றும் சென்னையில் உள்ள தூதரகங்களில் விசா சேவைகள் வழக்கம் போல் செயல்படும் என்றார்.

## ஆதார் சேவைகளுக்காக 'உதய்' அடையாளச் சின்னம் அறிமுகம்

**புதுடெல்லி, ஜன.10:**




யுஐடிஏஐ வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஆதார் சேவைகளை பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கு உதவிடும் வகையிலான அடையாளச் சின்னத்தை வடிவமைத்தல்மற்றும்அதற்கு பெயரிடுதல் தொடர்பாக 'மைகவர்ன்மென்ட்' வலைதளம் வாயிலாக போட்டி நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களிடம் இருந்து சுமார் 875 முன்மொழிவுகள் பெறப்பட்டு, அதில் இருந்து 'உதய்' என்ற சின்னம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'உதய்' சின்னத்தை யுஐடிஐஏ தலைவர் நீல்காந்த் மிஸ்ரா அறிமுகப்படுத்தினார். அதைத்தொடர்ந்து, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

ஆதார் சேவைகளில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் புதிய மாற்றங்கள், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு, குறிப்பிட்ட தகவல் பரிமாற்றம் உள்ளிட்டவை குறித்து தகவல்களை வழங்க இந்த அடையாளச் சின்னம் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வெனிசுலாவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊடுருவியுள்ளது: கேரள முதல்-மந்திரி கண்டனம்

**திருவனந்தபுரம், ஜன.10:**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இந்நிலையில், கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் இன்று கூறும்போது, அமெரிக்க அரசு ஏகாதிபத்திய ஆணவத்துடன் நடந்து கொள்கிறது. வெனிசுலாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை கவனத்தில் கொள்ளாமல் நடந்து கொண்டு, அதன் தலைவரை சிறைபிடித்து வைத்துள்ளது என குற்றச்சாட்டாக கூறினார்.

அமெரிக்க ராணுவ நடவடிக்கையானது, பிற நாடுகளில் அத்துமீறி தலையிடும் அதன் நீண்டகால வரலாற்றை பிரதிபலிக்கிறது. அமெரிக்காவின் பொருளாதார மற்றும் அரசியல் நலனிற்காக, அவற்றை பாதுகாப்பதற்காக, மோதல்களை உருவாக்கி, லட்சக்கணக்கான அப்பாவி மக்களை கடந்த காலங்களில் கொன்று குவித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

## கட்டு கட்டாக பணம் சிக்கிய விவகாரம்: நீதிபதி யஷ்வந்த் வர்மா மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

**புதுடெல்லி,ஜன.10:**



டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய யஷ்வந்த் வர்மா வீட்டில் கடந்தாண்டு ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்த நிலையில் பண மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. இந்த விவகாரத்தில் தனது பதவியை ராஜினாமா செய்ய நீதிபதி யஷ்வந்த் மறுத்துவிட்டார்.

இதையடுத்து மக்களவையில் அவர் மீது பதவி நீக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டு 3 உறுப்பினர் கொண்ட விசாரணை குழுவை சபாநாயகர் ஓம் பிர்லா அமைத்தார். இதே தீர்மானம் மாநிலங்களவையில் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், சபாநாயகரின் நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி யஸ்வந்த் வர்மா மனுத் தாக்கல் செய்தார்.

அதில் விசாரணைக்கு குழு அமைத்தது அரசியல் சாசனம் மற்றும் நீதிபதிகள் விசாரணை சட்டத்துக்கு எதிரானது என கூறி சபாநாயகரின் நடவடிக்கையை ரத்து செய்யும்படி நீதிபதி வர்மா கூறியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் திபாங்கர் தத்தா மற்றும் எஸ்சி.சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதிபதி யஷ்வந்த் வர்மா சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி, சித்தார்த் லுத்ரா ஆஜராயினர்.

மத்திய அரசின் சார்பில் சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜரானார்.

இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட உச்சநீதிமன்றம் தீர்ப்பை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தது.

## ஆதார் தொடர்பான கேள்விக்கு பதில் அளிக்கும் வசதி அறிமுகம்




**புதுடெல்லி, ஜன.10:**

ஆதார் அட்டையில் முகவரி மாற்றம், பெயரில் மாற்றம், பயோ மெட்ரிக் தகவல்களை புதுப்பித்தல் போன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் உதய் இணையதளத்தில் ஆதார் சேவை தொடர்பான கேள்விகள், சந்தேகங்களுக்கு எளிதில் பதில் கிடைக்க புதிய வசதி தொடங்கப்பட்டுள்ளது.

உதய் இணையளத்தில் 'ஆஸ்க் உதய்' என்ற பெயரில் இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது. இதில் கேள்விகளை கேட்டு பதில் பெறலாம். இதற்கான சின்னத்தை வடிவமைக்கும் போட்டியில், 875 பேர் பங்கேற்றனர். இதில், திருச்சூரைச் சேர்ந்த அருண் கோகுல் முதல் பரிசு வென்றார்.

புனேவைச் சேர்ந்த இத்ரிஸ் டவாய்வாலா, காஜிப்பூரைச் சேர்ந்த கிருஷ்ணா சர்மா ஆகியோர் இரண்டாவது மற்றும் மூன்றாம் பரிசை வென்றனர். இந்த சின்னத்துக்கு பெயர் வைக்கும் போட்டியில் போபாலைச் சேர்ந்த ரியா ஜெயின் முதல் பரிசை வென்றார்.

## குஜராத் காந்தி நகரில் 70 பேருக்கு டைஃபாய்டு: மனித உரிமைகள் ஆணையம் விசாரணை

**புதுடெல்லி, ஜன.10:**



குஜராத் காந்தி நகரில் மாசுபட்ட குடிநீரால் ஏற்பட்ட டைஃபாய்டு பாதிப்பு குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மாநில அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.


இது குறித்த செய்திக் குறிப்பு: குஜராத் மாநிலம் காந்தி நகரில் மாசுபட்ட குடிநீரை குடித்ததால் டைஃபாய்டு பாதிப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது குறித்து ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணையை மேற்கொள்கிறது.

காந்தி நகரின் குறிப்பிட்ட பகுதியில் டைஃபாய்டு காய்ச்சலால் 70 பேர் பாதிக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதிதாக நிறுவப்பட்ட தண்ணீர் விநியோக அமைப்பில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக இந்தப் பாதிப்பு உண்டானது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடிநீர் விநியோகத்துடன் கழிவு நீரும் கலந்துள்ள தண்ணீர்க் குழாயில் 7 இடங்களில் கசிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது. செய்திகளில் வெளியான தகவல்கள் உண்மை எனில், இதில் மனித உரிமைகளை மீறும் செயல் என்று ஆணையம் கருதுகிறது. இதையடுத்து இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு குஜராத் மாநில தலைமைச் செயலாளருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

## எஸ்ஐஆர் பணிக்காக மேற்கு வங்கத்தில் ஆன்லைன் விசாரணை விரைவில் தொடக்கம்

**கொல்கத்தா, ஜன.10:**



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்காக மேற்குவங்கத்தில் ஆன்லைன் விசாரணை நடைமுறை விரைவில் தொடங்கப்பட உள்ளது.

மேற்குவங்கத்தில் கடந்த நவம்பர் 4ம் தேதி முதல் டிசம்பர் 11ம் தேதி வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெற்றது. கடந்த டிசம்பர் 16ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 58,20,898 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. மேலும் எஸ்ஐஆர் படிவங்களை முறையாக பூர்த்தி செய்யாத 95 லட்சம் பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், நோட்டீஸ் கிடைக்கப் பெற்றவர்கள் மாநில தேர்தல் ஆணைய அலுவலகங்களில் முறையிட்டு வருகின்றனர். அவர்களிடம் விசாரணை நடத்தி, அவர்களது ஆவணங்களின் நம்பகத் தன்மையை தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேற்கு வங்கத்தை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர். தேர்தல் ஆணைய அலுவலகத்தில் அவர்கள் நேரில் ஆஜராக முடியாத சூழல் உள்ளது. இதை கருத்தில் கொண்டு மேற்கு வங்கத்தில் ஆன்லைன் விசாரணை நடைமுறையை தொடங்க மாநில தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து மூத்த அதிகாரிகள் கூறியதாவது: வெளியூரில் தங்கியிருக்கும் வாக்காளர்களுக்காக ஆன்லைன் விசாரணை நடைமுறையை தொடங்க உள்ளோம். இதற்காக விரைவில் டிஜிட்டல் தளம் தொடங்கப்படும். இதில் வாக்காளர்கள் ஆன்லைன் வாயிலாக ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். விசாரணை நாளின் போது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் நேரில் ஆஜராக வேண்டும். சம்பந்தப்பட்ட வாக்காளர் ஆன்லைன் வாயிலாக விசாரணையில் பங்கேற்று விளக்கம் அளிக்கலாம். சில தேர்தல் அலுவலர்களின் (பிஎல்ஓ) நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. தவறிழைக்கும் பிஎல்ஓக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "எனது கட்சி சிவசேனாவை பிரதமர் மோடி உடைத்தார்" - உத்தவ் தாக்கரே குற்றச்சாட்டு

**மும்பை, ஜன.10:**





கடந்த 2022 ஜூன் மாதம் சிவசேனா கட்சி இரண்டாக உடைந்தது. தற்போது உத்தவ் தாக்கரே தலைமையில் ஓர் அணியும், மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மற்றொரு அணியும் செயல்படுகின்றன.

இதுதொடர்பாக உத்தவ் தாக்கரே பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: "கடந்த 2014, 2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் பிரதமர் நரேந்திர மோடிக்காக நான் தீவிர பிரச்சாரம் செய்தேன். இரு முறை மோடிக்கு உதவி செய்த போதிலும் அவர் எனது கட்சியை உடைத்தார். அவர் பிரதமராக வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன்.

ஆனால் நான் அழிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார். மகாராஷ்டிராவில் இருந்து மும்பையை பிரிக்க வேண்டும் என்பது பாஜகவின் பழைய கனவு ஆகும். சிவசேனா நிறுவனர் பால் தாக்கரே கடந்த 2012-ம் ஆண்டு வரை வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பாஜக வளைந்து நின்றது. தற்போது அவர் உயிரோடு இல்லாத சூழலில் காகித அளவில் சிவசேனாவை அழித்துவிட்டனர்.

ஆனால் மக்களின் மனங்களில் இருந்து சிவசேனாவை அழிக்க முடியாது. அரசியல் நாகரிகத்தை மீறி பாஜக செயல்படுகிறது.

20 ஆண்டுகளுக்கு பிறகு நானும் ராஜ் தாக்கரேவும் ஒன்றிணைந்துள்ளோம். இனிமேல் நாங்கள் ஒரு போதும் பிரிய மாட்டோம்.

இவ்வாறு உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

## தேர்தல் அதிகாரிகளுடன் ஆணையர் ஆலோசனை

**புதுடெல்லி, ஜன.10:**

இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாடு 21-ம் தேதி டெல்லியில் தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து 100-க்கும் மேற்பட்ட தேர்தல் அலுவலர்கள் பங்கேற்கின்றனர். சர்வதேச மாநாட்டில் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கப்படும்.

இந்தியாவின் 4 ஐஐடி, 6 ஐஐஎம் கல்வி நிறுவனங்களை சேர்ந்த நிபுணர்களும் மாநாட்டில் பங்கேற்கின்றனர். அவர்கள் தேர்தல் ஆணையத்தின் டிஜிட்டல் பணிகள் குறித்து விளக்கம் அளிக்க உள்ளனர்.

இந்த சூழலில் சர்வதேச மாநாடு தொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் டெல்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது மாநாட்டில் விவாதிக்க வேண்டிய அம்சங்கள் குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது.

## 21-ம் தேதி டெல்லியில் தலைமை தேர்தல் அதிகாரிகள் மாநாடு




**புதுடெல்லி, ஜன.10:**

டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வருகிற 21-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை 'இந்திய சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை மாநாடு-2026' நடைபெற உள்ளது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து தேர்தல் மேலாண்மை அமைப்புகள் பங்கேற்கின்றன.

சுமார் 100 சர்வதேச பிரதிநிதிகள், தூதரக அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொள்கிறார்கள். மேலும் 4 ஐ.ஐ.டி.கள், 6 ஐ.ஐ.எம்.கள், 12 என்.எல்.யு.க்கள் மற்றும் ஐ.ஐ.எம்.சி. உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்கிறார்கள். மாநாட்டில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், தேசிய மற்றும் சர்வதேச கல்வி வல்லுனர்கள் தலைமையில் 36 கருப்பொருட்களில் குழு விவாதங்கள் நடக்கிறது. இந்த மாநாட்டின் முன்னோட்டமாக மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டை இந்திய தேர்தல் கமிஷன் டெல்லியில் நேற்று நடத்தியது. இதில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் சர்வதேச மாநாட்டின் நுணுக்கங்கள் மற்றும் அவற்றின் குறிப்பிட்ட பாத்திரங்கள் குறித்து விளக்கினர்.

## தண்ணீர் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்: தெலங்கானாவுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள்

**அமராவதி, ஜன.10:**

கோதாவரி நதி மீது கட்டப்பட்டு வரும் போலவரம் அணைக் கட்டு கட்டுமானப் பணிகளை ஹெலிகாப்டர் மூலம் முதல்வர் சந்திர பாபு நாயுடு பார்வையிட்டார்.

பின்னர் அவர் போலவரத்தில் செய்தியாளர்களிடம் பேசியதாவது: போலவரம் அணை கட்டுவது குறித்து தெலங்கானா அரசு, ஆட்சேபம் தெரிவித்து வருவது வருந்தத்தக்கது. கடலில் கலக்கும் நதி நீரை யார் வேண்டுமானாலும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். இதில் அரசியல் தேவையற்றது. தெலங்கானா மக்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும். தெலுங்கு இன மக்கள் அனைவரும் சமமானவர்களே. மக்களுக்காக அரசியல் செய்தால் நல்லது. ஆனால், அரசியலுக்காக மக்களை அவதியுறச் செய்யக்கூடாது. ஆர்டிஎஸ் பகுதியில் தண்ணீர் பிரச்சினை வந்தபோது மகபூப் நகருக்கு நாங்கள் தண்ணீர் வழங்கினோம்.

கல்வகுர்த்தி, தேவாதுலா அணைகளை நான்தான் தொடங்கி வைத்தேன். சமீபகாலமாக சிலர் பேசுவதைக் கேட்கையில், பல விஷயங்கள் புரியாத புதிராக உள்ளது. தேவாதுலா அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டால், அது போலவரம் அணைக்கு வரும். கீழ்த் தட்டில் உள்ள போலவரத்துக்கு தண்ணீர் வருவது இயற்கை. இதில் என்ன தவறு ? கோதாவரி நதியில் தேவைக்கேற்ற அளவுக்கு தண்ணீர் உள்ளது.

தேவையான தண்ணீரை உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள். உபரி நீரை நாகார்ஜுன சாகர், ஸ்ரீசைலம் போன்ற அணைகளிலும் நிரப்பிக் கொள்ளுங்கள். கிருஷ்ணா நதிக்கு நீர் வரத்து குறையும்போது, அதன் மேல்பாகத்தில் அணை கட்டினால் நஷ்டம் வரும்.

விரைவில் போலவரம் அணை நாட்டுக்கு அர்ப்பணிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.




## திருநெல்வேலி பணகுடியில் மாணவர் கொலை வழக்கில் இளைஞர் கைது



**திருநெல்வேலி, ஜன.10:** பணகுடி அருகே 10-ம் வகுப்பு மாணவர் கொலை செய்யப்பட்ட வழக்கில், இளைஞர் கைது செய்யப்பட்டார். திருநெல்வேலி மாவட்டம் பணகுடியைச் சேர்ந்த மாரியப்பன் மகன் லட்சுமணன் (15). இவர் அப்பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தார்.

இவரது வீட்டின் எதிர் வீட்டில் வசிப்பவர் ரத்தின வடிவேல். இவரது மகன் சபரிராஜன் (23). மாரியப்பன் மற்றும் ரத்தினவடிவேல் குடும்பத்தினர் உறவினர்கள்போல் பழகி வந்தனர். இதனால் லட்சுமணன் அடிக்கடி சபரிராஜன் சென்று விளையாடுவது வழக்கம்.

கடந்த 5-ம் தேதி பள்ளி முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த லட்சுமணனை, சபரிராஜன் அழைத்துள்ளார். இதையடுத்து, லட்சுமணன் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இருவரும் வீட்டின் வரவேற்பு அறையில் அமர்ந்து பேசிக்கொண்டே டிவி பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது மது போதையில் இருந்த சபரிராஜன் திடீரென்று ஆத்திரமடைந்து, அரிவாளால் லட்சுமணனை வெட்டியுள்ளார்.

இதில் பலத்த காயமடைந்த லட்சுமணன் உயிருக்குப் போராடினார். பணகுடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேல் சிகிச்சைக்காக நாகர்கோவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் லட்சுமணனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது தொடர்பாக பணகுடி போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து,

## புதுச்சேரியில் ‘ஜனநாயகன்’ திரைப்பட பேனர் விழுந்து ஒருவர் படுகாயம்: 3 பேர் கைது



**புதுச்சேரி, ஜன.10:** ‘ஜனநாயகன்’ படத்தின் பேனர் விழுந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர் படுகாயம் அடைந்தார். இதில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், 7 விஜய் ரசிகர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

புதுச்சேரி அரியாங்குப்பத்தை சேர்ந்த தனசேகரன் (64) ஓய்வு பெற்ற தமிழக அரசு போக்குவரத்து கழக ஊழியர். இவர் தனது மோட்டார் சைக்கிளில் தபால்காரர் வீதியில் சென்று கொண்டிருந்தார். அப்போது நடிகர் விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ திரைப்படம் வெற்றி பெற விஜய் ரசிகர்கள் வைத்திருந்த பேனர் திடீரென சரிந்து, தனசேகரன் மீது விழுந்தது.

இதனால் நிலைதடுமாறிய தனசேகரன், அங்கிருந்து பெரிய வாய்க்காலில் விழுந்தார். இதில் மூச்சு திணறி மயங்கினார். உடனே அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு, சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் தனசேகரன் இருப்பதால், மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதுகுறித்து அரியாங்குப்பம் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் பொது இடத்தை சேதப்படுத்தல், மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அலட்சியமாக செயல்படுதல் ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து பேனர் வைத்த தவெக நிர்வாகி கில்லி செல்வா, கார்த்திக், அருண்ராஜ் ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும் பிரவீன், சச்சின், செபாஸ்டியன், மாதவன், புவியரசு, அருள், பிரவீன் ஆகிய 7 பேரை தேடி வருகின்றனர்.

## முதல்வர் ஸ்டாலின் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்: மர்ம நபருக்கு போலீஸ் வலை



**சென்னை, ஜன.10:** சென்னை, எழும்பூரில் உள்ள தமிழக காவல் துறையின் தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு (அவசர அழைப்பு 100) நேற்று அதிகாலை போன் அழைப்பு ஒன்று வந்தது.

அதில், எதிர்முனையில் பேசிய நபர், ‘சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும், அது சிறிது நேரத்தில் வெடிக்கும்’ எனவும் கூறிவிட்டு இணைப்பை துண்டித்தார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கட்டுப்பாட்டு அறை போலீஸார், உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, முதல்வர் வீட்டில் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள், மோப்ப நாய்கள், மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனை செய்தனர்.

பல மணி நேரம் நடைபெற்ற சோதனையின் முடிவில் அங்கிருந்து எந்த வெடிப் பொருட்களும் கண்டெடுக்கப்படவில்லை. எனவே, வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தது தெரியவந்தது. இந்த விவகாரம் தொடர்பாக தேனாம்பேட்டை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

## நெல்லையில் 4.5 கிலோ கஞ்சா, பைக் பறிமுதல்: 3 பேர் கைது




**திருநெல்வேலி, ஜன.10:** திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம், குறிச்சி வாய்க்கால் பாலம் அருகில் நேற்று காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபர்களில் மேலப்பாளையத்தைச் சேர்ந்த பீர் முஹம்மது என்பவர் தப்பி ஓடிவிட, மற்ற நபர்களை போலீசார் சோதனை செய்தனர்.

அதில் அவர்கள் திருநெல்வேலி, மேலப்பாளையத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ராசப்பன், பஷீர் மகன் முஹம்மது ஹுசைன் மற்றும் அக்பர் அலி மகன் முஹம்மது பாதுஷா என்பதும், அவர்களிடமிருந்து சுமார் 4.5 கிலோ கிராம் கஞ்சா மற்றும் ஒரு இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# ‘வளர்ந்த இந்தியா’ என்ற இலக்கை அடைவதற்கு மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும்: ஆளுநர் வேண்டுகோள்



**காட்டங்கொளத்தூர், ஜன.10:** பெரிய அளவில் கனவு கண்டு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு, ‘வளர்ந்த இந்தியா’ என்ற இலக்கை அடைவதற்கு, மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்று எஸ்.ஆர்.எம். பல்கலை. விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் இந்தியக் குடியரசின் 75 ஆண்டுகள் வரலாற்றைப் போற்றும் வகையில், ‘இந்திய குடியரசு - 75 ஆண்டுகள்’ என்ற கருத்தரங்கு, வேந்தர் அருங்காட்சியகம் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு எஸ்ஆர்எம் பல்கலை. நிறுவனர் மற்றும் வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் தலைமை தாங்கினார். ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று ‘வேந்தர் அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

இதில் இந்திய அரசியலமைப்பின் பரிணாமம், கோட்பாடுகள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் குறித்த அரிய காட்சிப் பொருட்களும், ஆவணங்களும் இடம்பெற்றுள்ளன. பின்னர் கருத்தரங்கில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது: இளைஞர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் விலைமதிப்பில்லா சொத்து.

லட்சியத்துடன் ஒழுக்கத்தையும் இணைத்து, பெரிய அளவில் கனவு கண்டு, விடா முயற்சியுடன் செயல்பட்டு ‘விக்சித் பாரத்’ (வளர்ந்த இந்தியா) என்ற இலக்கை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்றார்.

வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் பேசும்போது, “ஜனநாயகத்தையும் தேசிய முன்னேற்றத்தையும் நிலைநிறுத்துவதில் வலுவான கல்வி நிறுவனங்களின் முக்கியப் பங்கு உள்ளது. கல்வி என்பது, ஒற்றுமை, தேசிய உணர்வு, பொறுப்புணர்வை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

உயர்கல்வி நிறுவனங்கள், தேசத்தின் மீது அர்ப்பணிப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன” என்றார்.

# புதுச்சேரி அரசு மின்சாரப் பேருந்து ஓட்டுநர்கள் திடீர் வேலை நிறுத்தம் - மக்கள் அவதி



**புதுச்சேரி, ஜன.10:** பி.எப், இ.எஸ்.ஐ. பணம் பிடித்தம் செய்யாத நிர்வாகத்தை கண்டித்தும், பணி பாதுகாப்பு வழங்க கோரியும் புதுச்சேரி அரசு மின்சாரப் பேருந்து ஓட்டுநர்கள் பேருந்துகளை இயக்காமல் திடீரென வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அவதி அடைந்தனர்.

புதுச்சேரி அரசின் போக்குவரத்து கழகம் சார்பில் தனியார் பங்களிப்புடன் ரூ.23 கோடியில் 25 மின்சார பேருந்துகள் நவம்பர் மாதம் முதல் இயக்கப்படுகின்றன.

இந்த மின்சார பேருந்துகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் ஊதிய பிரச்சினை, பி.எப் பிடிக்காத நிர்வாகத்தை கண்டித்து ஏற்கனவே ஊழியர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் இன்று மீண்டும் அரசு மின்சார பேருந்து ஊழியர்கள் தங்களுக்கு பி.எப், இ.எஸ்.ஐ பணம் பிடித்தம் செய்யாத நிர்வாகத்தை கண்டித்தும், பணி பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கோரியும், 6 மாதத்திற்கு பிறகு தான் பிடித்தம் செய்யப்படும் என நிர்வாகம் கூறியதால் நிர்வாகத்தை கண்டித்து ஊழியர்கள் இன்று காலை முதல் பேருந்துகளை இயக்காமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# இடைநிலை ஆசிரியர்கள் தொடர் போராட்டம்: சென்னையில் 2,500-க்கும் மேற்பட்டோர் கைது



**சென்னை, ஜன.10:** சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் சார்பில், கடந்த டிச. 26-ம் தேதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரையாண்டு விடுமுறை முடிந்து கடந்த 5-ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையிலும், ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்வதால் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது என்று தொடக்கக் கல்வித் துறை அறிவித்தது.

இதையடுத்து, இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். 14-வது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் நேற்று காலை சுமார் 500 ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், மதியம் 12 மணியளவில், எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பேரணியாக வந்து சேர்ந்தனர். தொடர்ந்து திடீரென மேம்பாலத்தில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் போக்குவரத்து முழுவதும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களை போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் கைது நடவடிக்கைகள் மட்டும் 3 மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது.

மேலும், அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் சில ஆசிரியர்கள் மயக்கமடைந்தனர். சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் மண்டபங்களில் அடைக்கப்பட்டு, இரவில் விடுவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் போராட்டத்தால் பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் பணிகளும் பாதிக்கப்பட்டு வருவதால், தமிழக அரசு இந்த விவகாரத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதேபோல், பணி நிரந்தம் செய்யக் கோரி பகுதிநேர ஆசிரியர்கள் சென்னை டிபிஐ வளாகம் முன்பு போராட்டம் நடத்தினர்.

அவர்களையும் போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்களின் கைது செய்யப்பட்ட வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. இதற்கு பாமக தலைவர் அன்புமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# விலையேற்றம் அமலுக்கு வரும்முன்பே தமிழ்நாட்டில், சிகரெட் விலை உயர்வு



**சென்னை, ஜன.10:** புகையிலைப் பொருட்களுக்கு விதிக்கப்படும் புதிய வரி அடுத்த மாதம் (பிப்ரவரி) 1-ந்தேதி முதல் அமலுக்கு வரும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதனால், சிகரெட் விலை கணிசமாக உயரும் சூழல் உருவாகியுள்ளது. மெல்லும் புகையிலை மீதான வரி 25 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாகவும், ஹுக்கா புகையிலை வரி 25 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாகவும், பைப் சிகரெட்டுகளுக்கான புகை கலவைகளின் வரி 60-ல் இருந்து 325 சதவீதமாகவும் உயர்த்தப்பட உள்ளது.

இந்தநிலையில், புதிய விலையேற்றம் அமலுக்கு வருவதற்கு முன்பே தமிழ்நாட்டில் சில கடைகளில் சிகரெட் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. முன்பு ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்ட கோல்டு பில்டர் சிகரெட்டுகள் தற்போது ரூ.12-க்கு விற்கப்படுகின்றன.

அதேபோல, கிங்ஸ் ரூ.20, சிசர் பில்டர் ரூ.10 என ஒரு சிகரெட்டுக்கு 2 ரூபாய் அதிகமாக வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக, டீக்கடைகள் மற்றும் சிறிய கடைகளில் கேட்டபோது, “மொத்த விற்பனையாளர்கள் 3 நாட்களுக்கு முன்பே விலையை உயர்த்திவிட்டனர். கோல்டு பில்டர் பாக்கெட் (10 சிகரெட்டுகள்) முன்பு ரூ.92-க்கு கிடைத்தது, தற்போது ரூ.97-க்கு வாங்க வேண்டியுள்ளது. பாக்கெட்டில் விலை ரூ.100 என அச்சிடப்பட்டு உள்ளதால், கேள்வி கேட்க முடியவில்லை” என தெரிவித்தனர்.

சிகரெட் உற்பத்தி நிறுவனங்கள் தரப்பில் அதிகாரப்பூர்வமாக விலை உயர்த்தப்படவில்லை என்றும், சில வியாபாரிகள் சிகரெட்டுகளை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், சிகரெட் அத்தியாவசிய பொருட்கள் பட்டியலில் இடம்பெறாததால், பதுக்கலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

விலையேற்றம் அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வருவதற்கு முன்பே சிகரெட் விலை உயர்ந்துள்ளதால், தமிழ்நாட்டில் புகைப்பிடிப்பவர்கள் கடும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.




ஜன.10:திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி - கலை இலக்கிய பெருமன்றம்-யாவரும் கேளீர் இதழ் ஒருங்கிணைத்த இசைமுரசு நாகூர் ஹனீபாநூற்றாண்டு விழாவில் அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பங்கேற்றார்.



ஜன.10:விருத்தாசலம் விருதகிரிஸ்வரர் திருக்கோயிலில் திருமண தம்பதிகளை பிரேமலதா வாழ்த்தினார்.

## ஜாதி பெயர் சொல்லி கொலை மிரட்டல் விடுத்தவர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்குப்பதிவு

**திருநெல்வேலி, ஜன.10:** திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம், வீரமாணிக்கபுரம் புதுகாலனியை சேர்ந்த அர்ச்சுனன் மகன் ஜானகிராமன். இவருக்கு மேலப்பாளையம் பகுதியை சேர்ந்த சண்முகம் மகன் முருகேசன் என்பவர் கடந்த 2023-ம் ஆண்டு கடனாக பணம் கொடுத்துள்ளார். அந்த பணத்தை ஜானகிராமன் திரும்ப தராததால், அவரது ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி கொலைமிரட்டல் விடுத்துள்ளார் முருகேசன். இதுகுறித்த புகாரின்பேரில் முருகேசன் மீது மேலப்பாளையம் காவல் நிலையத்தில் வன்கொடுமை தடுப்புச்

# முத்துப்பேட்டை அலையாத்திக்காட்டில் குவியும் வெளிநாட்டு பறவைகள் - சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி



**திருவாரூர், ஜன.10:** திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் உள்ள அலையாத்திக்காடு ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய பரப்பளவு கொண்ட காடுகளில் ஒன்றாகும். இந்த காடு சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களில் இருந்து கடலோர கிராமங்களை பாதுகாக்கும் இயற்கை அரணாக விளங்குகிறது. மேலும் கடலோரங்களில் ஏற்படும் மண் அரிப்பை பெருமளவில் தடுத்து நிறுத்துகிறது.

முத்துப்பேட்டை பகுதியில் 12 ஆயிரத்து 20 எக்டேர் பரப்பளவில் அலையாத்திக்காடு காணப்படுகிறது. திருவாரூர், தஞ்சை, நாகை ஆகிய மாவட்டங்களிலும் இந்த காடு பரவி உள்ளது.

காவிரி ஆற்றுப்படுகையின் தென்கோடியில்முத்துப்பேட்டை சதுப்பு நில அலையாத்திக்காடு அழகுற அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் அதிராம்பட்டினத்தின் மேற்கு பகுதியில் தொடங்கி நாகை மாவட்டத்தின் கோடியக்கரை கிழக்கு பகுதி வரை இந்த அலையாத்திக்காடு நீண்டுள்ளது.

முத்துப்பேட்டை பகுதியில் உள்ள அலையாத்திக்காட்டுக்குள் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிடலாம். அதற்கேற்ற வகையில் மரப்பலகையால் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

காடுகளை உயரே இருந்து பார்க்க வசதியாக உயர் கோபுரங்கள், ஓய்வெடுக்க குடில்கள் என இயற்கையை ரசிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வசதிகள் இங்கு உள்ளன. வனத்துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

அலையாத்திக்காட்டுக்குள் செல்லும் ஆற்றின் வழியே படகில் நெடுந்தூரம் பயணம் செய்வது சுற்றுலாப் பயணிகளுக்கு புதுவிதமான அனுபவத்தை தரும்.

குட்டி குட்டியாகதீவுகள் போல் காணப்படும் மணல்பாங்கான இடத்தில் வெளிநாட்டு பறவைகளையும் ரசிக்கலாம். இந்த அலையாத்திக்காட்டை சர்வதேச தரத்துக்கு உயர்த்த முற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. படகுதுறை பகுதியில் சுற்றுலாப் பயணிகள் காத்திருக்கும் பகுதியில் பிரமாண்டமான மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு பல்வேறு நாடுகளில் இருந்து பல்வேறு வகையான பறவைகள் வருகை தருகின்றன. இங்கு இனப்பெருக்கம் செய்வதை அந்த பறவைகள் வழக்கமாக கொண்டுள்ளன.

அதற்கேற்ற சூழல் இங்கு நிலவுவதாக பறவை ஆர்வலர்கள் கூறுகிறார்கள். தற்போது கடந்த சில வாரங்களாக வெளிநாட்டு பறவைகள் வரத்து அதிகமாக உள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நம்மாழ்வார் திருவடி தொழுதல்



மந்தைவெளி மாரி செட்டி தெரு ஆலய நம்மாழ்வார் திருவடி தொழுதல்.



மயிலை கேசவன் இராபத்து பத்தாம் நாள்.



சென்னகேசவர் ஆண்டாள் நீராட்ட உற்சவம்.

## கேட்ட வரம் தரும் முத்துமாரியம்மன் கோவில் சித்தர் லெட்சுமணன் சுவாமி குருபூஜை விழா



**மானாமதுரை, ஜன.10:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அன்னவாசல் புதூர் ரோட்டில் உள்ள எஸ்.கரிசல்குளம் முத்து மாரியம்மன் கோவில் சித்தர் லெட்சுமணன் சுவாமி ஆவார். இவர் அருள்வாக்கின் நிலத்தில் கிடைத்த கருங்கல்லை கேட்ட வரம் தரும் முத்து மாரியம்மனாக அப்பகுதியில் பக்த்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.

பங்குனி பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும். அப்போது லட்சுமணன் சுவாமி பக்தர்கள் கோரிக்கை யை அம்மனிடம் பேசி பூஜைகள் செய்து அருள் வாக்கு கூறி பக்தர்களுக்கு ஆசி வழங்குவார். கடந்த ஜனவரி மாதம் சித்தர் லட்சுமணன் சுவாமி ஜீவசமாதி அடைந்தார். அதைத் தொடர்ந்து சுவாமியின் முதல் ஆண்டு குருபூஜை விழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

வரும் பங்குனி மாதம் கேட்ட வரம் தரும் முத்து மாரியம்மன் கோவில் பங்குனி பொங்கல் பெருந் திருவிழா நடைபெறும். அப்போது ஏராளமான பக்தர்கள் தீச்சட்டி எடுத்து தீ மிதித்து வழிபாடு செய்வார்கள். விழா ஏற்பாடுகளை டிரஸ்டிகள் ராக்கு லட்சு மணன், பாண்டி ஆகியோர் செய்து இருந்தனர்.

## திருவம்பாவை ஊர்வலம்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்கழி 25 ஆம் நாள் திருவம்பாவை ஊர்வலம்.



உலகப் புகழ் பெற்ற துபாய் முகமது பின் ராஷித் நூலக அலுவலர் முகமது அவர்களிடம் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவியின் நூல்களான மின்னல் ஹைக்கூ, திரும்பிப் பார்க்கிறேன், கட்டுரைக் களஞ்சியம், இரா.இரவின் ஹைக்கூ உலகம் நான்கு நூல்களை ஊடகவியலாளர் முதுவை ஹிதாயத் அவர்கள் வழங்கினார்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் காமாட்சி அம்பாள் கோயிலில் யாக வேள்வி பூஜை



செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று முன்தினம் யாக வேள்வி பூஜை சிறப்பாக நடைபெற்றது. யாக வேள்வி பூஜையினை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார். உடன் பால சந்நியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் இருந்தார்.இக் கோயிலில் நடைபெறும் யாக வேள்வி பூஜை பிரசித்தி பெற்ற ஒன்றாக கூறப்படுகிறது.

## மானாமதுரை சிலம்ப அணியினர் தங்கம் வெள்ளி பதக்கம் பெற்று சாதனை




**சிவகங்கை, ஜன. 10:** தமிழக அரசு - பள்ளி கல்வித்துறை சார்பாக தேனி மாவட்டம் - ராயப்பன்பட்டியில் நடைபெற்ற 38 மாவட்டங்களுக்கு இடையிலான மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் சிவகங்கை மாவட்டம் - மானாமதுரை - சீனி ஆசான் சிலம்பம் பள்ளியின் சார்பாக பயிற்சியாளர்கள் செல்வம் மற்றும் முனியாண்டி தலைமையில் மாணவ - மாணவிகள் கலந்து கொண்டதில் இரட்டைக்கம்பு பிரிவில் மாணவர்கள் ரித்தீஸ், புகழேஷ் தங்கப்பதக்கத்தையும், ஒற்றைக்கம்புபிரிவில் அகதீஸ்குமார் தங்கப்பதக்கத்தையும்,மதன்குமார் வெள்ளிப்பதக்கத்தையும், கம்புச்சண்டை பிரிவில் ஷரோன் மற்றும் கரண்குமார் ஆறுதல் பரிசையும், ஒற்றைக்கம்பு பிரிவில் மாணவிகள் சுவாதி, ரோஷிணி, ஷாலினி ஆறுதல் பரிசையும் பெற்று சிவகங்கை மாவட்டத்திற்கும், பயின்று வந்த சிலம்ப பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

சீனி ஆசான் சிலம்பம் பள்ளி மாணவ மாணவிகள் தொடர்ந்து 4 ஆவது முறையாக தமிழக அரசு - பள்ளி கல்வித்துறை மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் வென்றது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கார்னர்

## திருமாவளவன் கூட்டணியில் இடம் பெறுவீர்களா?- எதுவும் நடக்கலாம் என சொன்ன ராமதாஸ்



**திண்டிவனம், ஜன.10:** திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடம் இன்று விருப்ப வேட்பு மனு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கலந்து கொண்டு விருப்ப மனுக்களை வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆட்சியில் பங்கு வேண்டாம் என நிபந்தனை அற்ற ஆதரவை கருணாநிதிக்கு கொடுத்தோம். காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் பங்கு கேட்டனர். ஆனால் ஆட்சியில் பங்கு இல்லாமல் 5 ஆண்டுகள் முழுமையாக கருணாநிதி ஆட்சிக்கு ஆதரவு கொடுத்தோம். நான் சொன்னால் ஏன், எதற்கு என்று தட்டாமல் இருக்கும் தலைவரை நான் உடன் வைத்திருக்கிறேன். பா.ம.க. என்பது என் தலைமையிலான ஒரே அணிதான். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி நன்றாகத் தான் இருக்கிறது.

கட்சியை கைப்பற்றுவது தொடர்பாக சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்து வருகிறோம். எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்து வருகிறோம். வெற்றியும் பெறுவோம்.

கேள்வி:- நீங்கள் தான் பா.ம.க.வின் முகம் என்கிறீர்கள். ஆனால் உங்களை மீறி எடப்பாடி பழனிசாமி அன்புமணிக்கு ஆதரவளித்தது ஏன் ?

ப:- எனக்குத் தெரியவில்லை. உங்களுக்கு தெரிந்தால் சொல்லுங்கள். இரண்டில் ஒன்றை தொடுங்கள். நான் சொல்கிறேன்.

கே:- திருமாவளவன் இருக்கக்கூடிய கூட்டணியில் நீங்கள் இணைவீர்களா?

ப:- அரசியலில் எதுவும், எப்போதும், என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். இதுவும் எப்போதும் நடக்காது என கூற முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பா.ம.க. தலைமை நிலைய செயலாளர் அன்பழகன் விழுப்புரம் தொகுதியில் போட்டியிடுவதற்காக 27 பேர் விருப்ப மனு தாக்கல் அளித்துள்ளனர். அதே போல் டாக்டர் ராமதாசின் மகள் ஸ்ரீகாந்திமதி போட்டியிட 100-க்கும் மேற்பட்டோர் விருப்ப மனு அளித்துள்ளனர்.

## தேர்தல் விளம்பரத்துக்காக விவசாயிகளை மோசடி செய்யும் திமுக அரசு - அண்ணாமலை தாக்கு



**சென்னை, ஜன.10:** முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;


தமிழக கூட்டுறவு சங்கங்களில், பழைய பயிர்க் கடன் முழுத் தொகையும் கட்டிவிட்டு, புதிய கடன் புதுப்பிப்புக்காக காத்திருக்கும் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள், பயிர்க் கடன் புதுப்பிக்கப்படாததால், கடும் பண நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

பொங்கலுக்கு ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூ.3,000 கொடுக்க திமுக அரசிடம் பணம் இல்லாமல், விவசாயிகளின் பயிர்க் கடன் பணத்தை மடைமாற்றி, பல ஆயிரக்கணக்கான விவசாயிகளை இன்று மன உளைச்சலுக்கு தள்ளியிருக்கிறது திமுக அரசு.

பொங்கல் பண்டிகை கொண்டாடுவதே, விவசாயத்தைப் போற்றுவதற்காகத்தான் எனும்போது, தங்களது தேர்தல் விளம்பரத்துக்காக, விவசாயிகளை திட்டமிட்டு மோசடி செய்திருக்கிறது திமுக அரசு. உடனடியாக விவசாயிகளின் பயிர்க் கடன்களைப் புதுப்பித்து, அதற்கான பணத்தை விடுவிக்க வேண்டும் என்றும், விவசாயிகளின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என்றும், திமுக அரசை வலியுறுத்துகிறேன்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எத்தனை தொகுதிகளில் பா.ஜ.க. போட்டி, அமைச்சரவையில் பங்கா? – நயினார் நாகேந்திரன் பதில்



**சென்னை, ஜன.10:** சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள இல்லத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அ.தி.மு.க. - பா.ஜ.க. தொகுதி பங்கீடு, கூட்டணியில் மேலும் சில கட்சிகளை சேர்ப்பது குறித்து எடப்பாடி பழனிசாமி, நயினார் நாகேந்திரன் ஆலோசனை நடத்தினர். சுமார் 30 நிமிடங்கள் பா.ஜ.க. - அ.தி.மு.க. தலைவர்கள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை நிறைவு பெற்றது.

எடப்பாடி பழனிசாமியை சந்தித்தபின் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

* சென்னையில் இம்மாத இறுதியில் பிரதமர் மோடி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

* பிரதமர் மோடியின் வருகையையொட்டி ஆலோசனை நடத்தினோம்.

* அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையேயான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது.

* பா.ஜ.க.வுக்கு எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்.

எத்தனை தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியிட விருப்பம், போட்டியிட விருப்பமான தொகுதிகள், அமைச்சரவையில் பங்கா? போன்ற செய்தியாளர்களின் கேள்விக்கு நயினார் நாகேந்திரன் பதில் அளிக்க மறுப்பு தெரிவித்தார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com